REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 35630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

பாக் - ஆப்கன் தகராறு

கவர்னர் - ஜெனரலை அழைத்துப் பேச ஆப்கன் மன்னர் தயாராம்!

கராச்சி, ஜன. 1—

ஆப்கனிஸ்தான் வருமாறு பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரலுக்கு அழைப்பு அனுப்ப ஆப்கன் மன்னர் தயாராக இருப்பதாக காபூர் வானொலி அறிவித்திருக்கிறதாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 3] சென்னை: மார்கழி 18உ திங்கள் (2-1-56) ★ ★ வெளியூர்: மார்கழி 19உ செவ்வாய் (3—1—56) [இதழ் 172

தேம்பியழுவோர்க்கு மக்கள் தந்த காணிக்கை

'நாம் தரும் உதவி நல்லெண்ணத்தின் ஒரு சொட்டு'

'இயற்கை உற்பாதம் விளைவித்த துயர் துடைக்க இறுமாப்புடன் பணியாற்றுவீர்'

சென்னைக் கூட்டத்தில் அண்ணா கருத்துரை

"குழந்தைக்கு வயிற்றில் ஏற்பட்ட ஏதோ கோளாறினுல் வலி கண்டு அழுகிறது; தாய், குழந்தையைத் தூக்கிவைத்துக் கொண்டு அதன் வயிற்றைத் தடவுகிருள்; தாய்க்கு நன்ருகத் தெரியும்—வயிற்றுக்குள் ஏற்பட்ட நோயினுல் உண்டாகும் வலியைப் போக்க வயிற்றின்மேல் தடவினுல் போதாது - நோய் குணமாகாது என்பது; குழந்தைக்கும் சிறிது தெரியலாம்; அருகிலிருப்போரும் அறிவர்; என்ருலும், வலியினுல் அழும் குழந்தையின் வயிற்றைத் தடவி விடுகிருள்; இதுதான் தாய்மை உணர்ச்சி.

"இதுபோலத்தான் தஞ்சை, இராமநாதபுரம் மாவட்டங்களில் புயல், வெள்ளக் கொடுமையால் அவதிப்படுவோருக்கு நாம் திரட்டித்தரும் சிறு சிறு உதவிகள் போதுமானதல்ல என்பது நமக்குத் தெரியும்; என்ருலும், நாம், இங்கே குவிந்திருக்கும் துணிகளை, சிறு சிறு தொகைகளைத் தந்திருக்கிருேம்—நமது அனுதாபத்தைக் காட்டிக்கொள்வதற்காக—தாய்மை உணர்ச்சியின் காரணமாக—வயிற்று வலியால் அழும் குழந்தையின் வயிற்றை மேலே தடவிவிடும் தாய் போல, இன உணர்ச்சியின் காரணமாக, நமது மக்களுக்கு ஏற்பட்ட கொடுமையைக் களைய நாம் நமது சிறு சிறு உதவிகளைத் தருகிருேம். இது, நமது நல்லெண்ணத்தின் ஒரு சொட்டு.

"நாமும் பிறரும் இப்படி நிதி திரட்டுவதைக் 'கூடாது' என்று நிதி மந்திரி பேசியதை எனக்கு முன் பேசிய தோழர்கள் கண்டித்தார்கள்.

"'யார் யாரோ நிதி திரட்டுகிருர்கள்; அவர்களிடத்தில் நிதியைத் தந்து ஏமாந்து விடாதீர்கள்'—என்று, சுப்ரமணியம் பேசினுராம.

"எந்த சுப்பிரமணியம் தெரியுமா? பார்ப்பனரல்லாத இயக்கத்தில் சேர்ந்திருந்தால், எனக்கும—காமராசருக்கும இந்த உயர்ந்த பதவிகள் கிடைத்திருக்குமா என்று பேசிய சுப்பிரமணியமதான் இப்படிப் பேசினுராம—அதுதான் சுப்பிரமணியம.

"நாம், பார்ப்பனரல்லாத இயக்கத்தில் சேர்ந்திருப்பதால் பதவி கிடைக்காது என்பதைத் தெரிந்தும், பார்ப்பனரல்லாத இயக்கத்திலேயே இருக்கிருேமே—இதுதான் நாம!

"அந்தச் சுப்பிரமணியம, 'யார் யாரோ நிதி திரட்டுகிருர்கள்' என்று பேசுகிருர்.

"யார், யாரோ என்பதை, 'அவர் யார்—நாம் யார்' என்பதை நாட்டு மககள் நன்கு உணர்ந்துதான் இருக்கிருர்கள்.

"மந்திரிகளா யிருப்பதால் அவர் போன்ருருககு இருக்கும் பெருமையைத் தவிர, மனிதர்கள் என்பதால் மட்டும் அவர்களுக்கு மக்களிடத்தில் இருக்கும் பெயர் 'மிக மட்டமானது' என்பதையும் நாட்டவர் தெரிந்தே இருக்கிருர்கள்.

"ஒருவேளை, 'தேர்தலில் மககள் அப்படிச் சொல்லவில்லை' என்று நினைத்துக்கொண்டு அந்தமாதிரி அப்படிப் பேசியிருக்கலாம; அப்படியானுல், அவருக்குச் சொல்ல விரும்புகிறேன்—'தேர்தல் வரட்டும நண்பரே, தேர்தல் வரட்டும.'

"யார் யாரோ திரட்டுகிருர்கள் என்ருல், இப்படி யார் யாரோ திரட்டினுல்தான், இயற்கையின் கொடுமைக்கு ஆளாகித் தவிககும் மக்களின் துயர் துடைக்க முடிகிறது என்ற நிலை நாட்டில் நிலவுகிறது.

"யார் யாரோ—மந்திரிகள் பலர் தொடர்ந்து அங்கு போய் பார்த்து வருகிருர்கள்—நிவாரண வேலையில் ஈடுபடுகிருர்கள் என்று கூறப்பட்டாலும், நிவாரணம போதுமான அளவில் தரப்பட்டதாகத் தெரியவில்லையே! அங்குள்ள மக்கள் முழுவதுமாகக் கவலை நீங்கிவிட்டார்கள்' என்று, சர்க்கார் கூடக் கூற முடியாது. அப்படியிருக்குமபோது, இப்படி யார் யாரோ திரட்டி நிவாரண மளிததுமகூட, துயர்ப்படும் மக்கள் கண்ணீர் துடைக்கப்படவில்லை என்ருல், மந்திரி, 'யார் யாரோ திரட்டுகிருர்கள்' என்று பேசுவது பொருளற்றதாக இல்லையா?

பர்மா: அரிசி தருகிறது

தென்னகத்தில், புயலாலும்—புனலாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காகப் பர்மா சர்க்கார் 200 டன் அரிசியை நன்கொடையாகத் தந்துள்ளனர்

சென்னை, ஜன. 2—

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் ஏற்பட்ட இயற்கைக் கொடுமைகளுக்கு ஆளாகித் தேம்பியழும் மக்களுக்கு, சென்னை மக்கள் தங்களின் அனுதாபத்தைத் தெரிவிக்கும் வகையில் தங்களாலான காணிக்கையை நேற்று செலுத்தினர்.

மேலும் அவர் சொல்லுக்கு நாட்டு மக்கள் எத்தனை மதிப்பு வைத்திருக்கிருர்கள் என்பதற்கும் இந்தக் கூட்டமே நல்ல சான்ருகும்.

"எனவே, இதுபோன்று இயற்கை உற்பாதங்கள் ஏற்படும்போது, சர்க்கார், 'யார் வேண்டுமானுலும் நிதி திரட்டி அனுப்பலாம்' என்று கூறுகிற நாகரீக உள்ளம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

"காமராசர், ஆச்சாரியார் கூறியதுபோல, 'எல்லாம் கடவுளின் கோபம்தான்' என்று கூறிவிட்டு வாளாவிருந்துவிடாமல், 'மக்கள் கோபம் கொள்வார்களே' என்பதற்கு அஞ்சியேனும், பாழடைந்த பகுதிகளுக்கு ஓடி நிவாரண வேலைகளில் ஈடுபட்டதை நாம் பாராட்டுகிருேம்.

"ஒரு பணக்காரன் தனது மூத்த மகனை ஒரு நாள் அழைத்து, 'ஏழைகளைக் கேவலமாக நடத்தாதே; அவர்களின் பகையைத் தேடிக்கொள்ளாதே'—என்று கூறினுனம்; மகனுக்கு ஆச்சரியமாயிருந்ததாம்; ஏழைகளைத் துச்சமென மதித்து வரும தன் தந்தையின் புதிய உபதேசம கண்டு, ஆச்சரியப்பட்ட அவன், 'ஏனப்பா?' என்று கேட்டானம; பணக்காரத் தந்தை, 'ஒரு நாளைக்கு அந்த ஏழைகளும் பணக்காரர்களாகிவிடக்கூடும்' என்று கூறினுனம்.

"அதுபோல, பாதிக்கபபட்ட மக்களுக்கு நிவாரணமளிப்பதற்காக ஓடியாடிய காமராசர், எந்தக் காரணத்தை மனதில் கொண்டாரோ? 'அவர்களும் ஓட்டர்கள் அல்லவா?' என்ற எண்ணங்கொண்டிருக்கலாம், காமராசர்! எப்படியோ அவர், ஆச்சாரியாரைப் போல, 'எல்லாம் கடவுள் செயல்' என்று கூறிவிட்டு வாளாவிருந்துவிடாமல் காரியமாற்ற நினைத்ததற்காக மக்களின் நன்றியறிதலைப் பெறுவார்,"

—என்று, சென்னை புயல் நிதிச் சிறப்புக் கூட்டத்தில் பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"நமது நாட்டில் எப்போதோ ஒரு முறைதான் இத்தகு இயற்கையின் உற்பாதங்கள் தோன்றுகின்றன. வேறுபல நாடுகளில், இயற்கையின் உற்பாதம் பெரும் அளவில் தோன்றுவதையும் அந்த மககள் சகித்துககொண்டுதான் இருககிருாகள்.

"இத்தாலி நாட்டில் உள்ள வெசுவியஸ் எரிமலை பற்றி மககெல்லாம் தெரியும். அந்த எரிமலை தழும்பி, குடமுககுள் வைத்திருக்கும் கந்தகக் குழமபைக் கககிவிடும் பிததுவிட்டால, ஆயிரககணக்கான மககள் எனருலும—அகப்பட்டுக்கொண்டால் அவதிப்பட வேண்டியதுதான் அந்த எரிமலை வெடிக்கும் உறபாதஙகளையும் தாங்கிக்கொணடுதான், 'என்று வெடிககுமோ' என்ற அச்சதடனதான் இததாலி நாட்டு மக்கள் வாழ்கின்ருாகள்.

'வெள்ளம் வராமல் தடுக்கமுடியும என்பது குறித்து எனககு முன பேசியவாகள் குறிப்பிட்டார்கள்.

'டென்மார்க், நார்வே நாடுகளில் கடல் கொந்தளிதது நாட்டுககுள் அடிக்கடி புகுந்து கொடுமை விளைவிககிறது என்பதைத் தடுப்பதற்காக, கடல நீர் நாட்டுககுள் புகுந்தால் அதனை ஏற்றுககொண்டு தேககிவைதது, பின், வேறுவழியாக கடலுககுள் வழிய விடுகிற 'டைக்ஸ்' என்ற அணைகளை கட்டியிருககிருாகள்

'ஜப்பான நாட்டு பூகம்பம் உலகப பிரசித்தமானது.

'இப்படி, உலகத்தில் பல நாடுகளிலும், இயற்கையின் உற்பாதஙகளை அனுபவிககும் மக்கள் இருக்கத்தான் செய்கிருர்கள்; அவர்களுக்கு ஏற்படும் துயர் துடைக்க நல்ல அரசுகளும், உறுதிகொண்ட மக்களும் இருககிருர்கள்.

"நேரு பண்டிதர், புயல் வெள்ளப் பகுதிகளைப் பார்க்க வராதது குறித்து நண்பர்கள் பேசினுர்கள்; பததிரிகைகளில் எழுதினுர்கள்; மககளுக்குக் கூட சிறிது கோபம் தான்; ஆனுல், யாரைப் போய் எந்தக் காரியததிற்கு அழைப்பது என்று தெரிய வேண்டாமா?

"நேரு இன்று எவ்வளவு பெரிய மனிதர்? எப்படிப் பட்ட வரவேற்புகளைப் பெற்றுக்கொண்டிருப்பவர்? அவரைப்போய் அழைக்கிருர்களே, இந்தச் 'சிறிய' காரியத்திற்கு! அழைக்கலாமா? அவரை அழைப்பது என்ருல் ஒரு விருந்து-கேளிக்கை—குறைந்தது ஒரு பாட்டுக் கச்சேரிக்காவதுதான் அழைக்கலாமே தவிர, வெள்ளத்தாலும், புயலாலும் மக்கள் அவதிப்படுவதை, அதுவும் தென்னுட்டு மக்கள் அவதிப்படுவதைப் பார்க்கவா அழைப்பது?

"அவர் பார்த்தாலும் என்ன கூறுவார்?

"இது வெள்ளமே அல்ல—என்றுதானே கூறுவார்? இமயம் மிதக்க வேண்டும்; விந்தியம் மூழ்க வேண்டும்—அப்போதுதான் அவருக்கு வெள்ளமாகத் தெரியும்—தென்னுட்டைப் பொறுத்த அளவில்!

"எனவே, நாம்தான் நம் மக்கள் அவதி பற்றிக் கவலைப்பட்டாக

(4-ம் பக்கம் பார்க்க)

புயல், வெள்ள நிவாரண நிதிக்கென சென்னை மாவட்ட தி. மு. கழகத்தவர் 1—1—56 அன்று மாலை எழும்பூர் 'டென்னிஸ்' விளையாட்டு மைதானத்தில் ஏற்பாடு செய்திருந்த சிறப்புக் கூட்டம் மகத்தான வெற்றியைத் தேடித் தந்தது.

கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள், பயன்படும் துணி—அல்லது, தங்களாலான பணம் தந்து கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தோழர் செங்குட்டுவன் முன்மொழிய, தோழர் சேவியர் வழிமொழிய சென்னை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, உரை நிகழ்த்துகையில் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கியதுடன், புயல் நிவாரணத்திறகாக தி மு கழகம்—குறிப்பாக சென்னை மாவட்டம் மேற்கொண்டிருககிற நடவடிக்கைகள் குறித்து விளக்கினுர்.

அடுத்து தோழர் மு. கருணநிதி திராவிட மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்களைப் போக்க தி. மு. கழகம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை விளக்கி, ஆட்சியாளர்களின் நிர்வாக 'இலட்சணத்'தை, எடுத்துக்காட்டுடன் கண்டித்துப் பேசினுர்.

பின்னர், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தேடித்தருவதில் சர்க்காரின் அசமந்தப் போக்கைக் கண்டித்தும், துரிதமாக நிவாரணம் தரப்பட வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தியும் உரை நிகழ்த்தினுர்.

அண்ணா அவர்கள் பேசுவதற்கு முன்பாக, புயல் வெள்ள நிவாரணத்திற்கெனத் தரப்பட்ட ஒரு மின் விளக்கு, பேனு, பாரதியாரின் கவிதைத் தொகுப்பு இரண்டு பிரதிகள் முதலியனவற்றை ஏலத்திற்குவிட்டு, கிடைத்த தொகையை (விவரங்கள் பின்னர்) புயல் நிதியில் சேர்த்துக்கொண்டார்கள்.

பல வெளியூர்த் தோழர்களும், சில மன்றங்களும் புயல் நிதிக்கென சிறுசிறு தொகைகள் தந்து உதவினர்.

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த 'கிளி சாஸ்திரம்' பார்க்கும் தோழர்கள் சார்பாக 1001 காலணுக்கள் கொண்ட பண முடிப்பு ஒன்று தரப்பட்டது. (விவரம் பின்னும்)

இரண்டு மூன்றுமுறை மின்சாரம் தடைப்பட்டதைத் தவிர, கூட்டம் எல்லா வகையாலும் மிக வெற்றிகரமாகத் தலைவர் முடிவுரையுடன, நன்றி நவின்றபின் முடிவுற்றது. (ந. த. நி.)

தொழிலாளர் நன்கொடை

கோவை மாவட்டத்திலுள்ள 40-ஆலைகளைச் சேர்ந்த 43,000 தொழிலாளர்கள், சிப்பந்திகள் ஆகியோர், தங்களுடைய ஒரு நாள் ஊதியமான ரூ 75,867—7—0-யும் புயல் நிவாரண நிதிக்கு நன்கொடையாகத் தந்தனர்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 2-1-'56 திங்கள்

வாழ்க-1955! வருக-1956!!

புதிய ஆண்டு பிறந்துவிட்டது; நேற்று முன்தினத்துடன், திரும்பவே பெறமுடியாத பல்லாண்டுகளுடன் 1955-ம் ஆண்டும் (சர்ந்து கொண்டுவிட்டது.

நீள் வையத்தின் நெடிய வாழ்வை, சிறுகச் சிறுக அரிந்துவரும் காலமெனும் கூரியகொடுவாளின் வேகத்தை அளவிட்டுக் காட்டுவனதான் ஆண்டுகள். பிறந்துள்ள புதிய ஆண்டு, இறந்துபோன காலத்தின் எல்லையைத் தொட்டுக் காட்டுகிறது—மனித இனத்திற்கு!

சென்றுபோன ஓராண்டில், உலகம், வெற்றி எனும் கூரையில் ஏறியிருக்கிறது; தோல்வி எனும் பாதாளத்திலும் வீழ்ந்திருக்கிறது; நம்பிக்கை எனும் ஊன்றுகோல் கொண்டு எழுந்திருக்கிறது—மீண்டும், முயற்சி எனும் ஏணி பற்றி வெற்றி முகட்டைத் தொட முற்படுகிறது.

கடந்துவிட்ட ஓராண்டு, உலகில் பலரை உயர்த்தியிருக்கிறது — எண்ணற்றோரைத் தாழ்த்தியிருக்கிறது; பலருக்கு வெற்றிப்பாதைக்கு வழிகாட்டியிருக்கிறது — பலருக்குத் தோல்வியைத் தேடித் தந்திருக்கிறது; பலரை மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தியிருக்கிறது—எண்ணற்றோரை துயர்க் கடலில் தள்ளியிருக்கிறது.

பல மக்களுக்கு விடுதலை வழங்கியிருக்கிறது—பல மக்களின் அடிமைத்தனத்தை ஆதிக்கபுரியினர் உறுதி செய்யவும் உதவியிருக்கிறது; புதுமைகள் பலவற்றைச் சமைத்திருக்கிறது —பழமைகள் சிலவற்றிற்குச் சவக்குழி தோண்டியிருக்கிறது.

மனித இனத்தின் உயர்வாழ்வுக்கு அரிய பொருள் பல உருவாக்கித் தந்திருக்கிறது-கடந்த ஆண்டு! மனித வாழ்வைப் பூண்டற்றுப் போகச் செய்யும் பயங்கர விளைவுகளுக்கு ஒத்திகை நடத்திக்காட்டியும் இருக்கிறது.

விடுதலை வீரர்கள் பலரை அறிமுகப்படுத்தியிருக்கிறது — வேடதாரிகளை அம்பலப்படுத்தியிருக்கிறது; அரசோச்சிக் கொண்டிருந்தவர்களை அரியாசனத்திலிருந்து அகற்றியிருக்கிறது—எதிர்பாராதவர்களிடம் கோலெடுத்துக் கொடுத்திருக்கிறது.

எதிர்காலத்தில் நம்பிக்கை கொள்ளத் தூண்டியிருக்கிறது —அதேபோது, 'ஏமாந்துவிடாதே' என்று எச்சரிக்கையும் விடுத்திருக்கிறது.

சுருங்கக் கூறின், கடந்த ஆண்டு, மனித வாழ்வைச் செம்மைப்படுத்தவும் சீரழிக்கவும் உதவியிருக்கிறது; மகிழ்ச்சியும் தந்திருக்கிறது; மருட்சியும் ஊட்டியிருக்கிறது; நம்பிக்கையையும் அவநம்பிக்கையையும் இரட்டைக் குழந்தைகளாகப் பெற்றுத் தந்திருக்கிறது.

கடந்த ஓராண்டில் உலகம் சந்தித்துள்ள சம்பவங்கள், அனுபவித்துள்ள மாற்றங்கள், ஏற்றுக்கொண்டுள்ள முன்னேற்றங்கள், சாதித்துள்ள சாதனைகள், பெற்றுள்ள வெற்றி தோல்விகள், அனுபவித்துள்ள இன்ப துன்பங்கள், அடைந்துள்ள உயர்வு - தாழ்வுகள் முதலியனவற்றைக் கணக்கெடுப்பது அத்தனை சுலபமானதல்ல.

வெற்றியா தோல்வியா? இன்பமா துன்பமா? வாழ்வா அழிவா? நம்பிக்கையா அவநம்பிக்கையா?—எவை அதிகம் என்று கணிப்பதும் மிகக் கடினமானவைதான்.

என்றாலும், சென்றுபோன ஆண்டு, உலகத்திற்குச் சீரியதோர் வழிகாட்டி; ஒளிமிக்கதோர் கலங்கரை விளக்கம்; அறிவும் அனுபவமும் மிகுந்த ஞானசிரியன் என்பதை மட்டும் எவரும் உணரமுடியும்.

கடந்தகால அனுபவங்களைக் காட்டிலும், எதிர்காலத்தைச் சிறப்புடையதாக்க, ஆற்றல் பொதிந்த—தகுதி மிகுந்த வழிகாட்டி வேறு கிடையாது என்பது, நெடுங்காலத்திற்கு முன்பே உலகம் உணர்ந்துள்ள உண்மையாகும்.

இந்த உண்மை உணர்வுடன் தான், திராவிடர்கள் தங்கள் எதிர்காலத்தைக் கணிக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

கேவலமான ஆதிபத்திய ஆசைகள், ஈவிரக்கமற்ற சுரண்டல் நோக்கங்கள், அநாகரீகமான 'ராஜ்ய' ஏற்பாடுகள் முதலியவற்றிற்கு அழுத்தம் மிகுந்த தங்கள் நெஞ்சத்தைப் பிறப்பிடமாக்கிக் கொண்டிருக்கும் ஜனநாயகப் பசுந்தோல் போர்த்திய புதிய ஏகாதிபத்தியப் புலிகளான வடநாட்டவரின் அடிமை நுகத்தடிக்குக் கழுத்துக் கொடுத்திருக்கும் வீரமும், தீரமும் செறிந்த தொன்மைமிகு வரலாற்றுச் சிறப்புக்கொண்ட திராவிடர்களின் விடுதலை வேட்கை, கடந்துபோன ஓராண்டில் சிறிதும் தணிந்துவிடவில்லை என்பதுமட்டுமல்ல— தளிர்விட்டுத் துளிர்த்து, மேலும் ஓங்கி வளர்ந்திருக்கிறது.

திராவிடரின் விடுதலைப் பட்டாளமான தி. மு. கழகம், கடந்துபோன ஆண்டில் மேலும் வலிவும், பொலிவும் பெற்றிருக்கிறது; அதன் நடவடிக்கைகள் பெரும் அளவில் விரிந்து நின்றிருக்கின்றன; அதன் கண்ணியம், அதன் கட்டுப்பாடு, அதன் கடமை உணர்வு, மேலும் உரம் பெற்றிருக்கிறது.

அதன் ஜனநாயகப் பண்பு பலருக்கு — மாற்றாருக்குப் பாடம் கற்றுத் தந்திருக்கிறது. பட்டாளம் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது; அளவில் மட்டுமல்ல—ஆற்றலில், செயல் திறத்தில், செந்நாப்புலமையில் —எல்லாவகையாலும்!

திராவிடம், அதேபோது, மேலும் சுரண்டப்பட்டிருக்கிறது; கொள்ளை கொடுத்திருக்கிறது; தாழ்த்தப்பட்டிருக்கிறது; இயற்கையின் கொடுமைக்கு வேறு ஆளாகித் தவித்திருக்கிறது; கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறது.

வடநாடோ, கடந்த ஓராண்டில் வளர்ந்திருக்கிறது; வளம் பெற்றிருக்கிறது; வனப்பு செழி-வுகளை நிமிர்த்திக்கொண்டிருக்கிறது; கண்ணீரைத் துடைத்துக்கொள்ள வழிபல கண்டிருக்கிறது.

வடவரோ, தென்னாட்டின் மீது தங்களுக்குள்ள ஆதிக்கப் பிடிப்பை வலுப்படுத்திக்கொள்வதில் தங்கள் முழு ஆற்றலையும் செலவிட்டிருக்கின்றனர். தங்கள் நாடு செழிக்கக் கோடி கோடியாகப் பணத்தை வாரி இறைத்திருக்கின்றனர். தென்னாட்டின் மீது தங்களுக்குள்ள ஆதிக்க பலத்தை நீடித்து நிலைநிறுத்திக் கொள்ள, புதிய புதிய முறைகளைத் தேடிக்கொண்டு செயல்பட்டிருக்கின்றனர்.

வடவரிடமிருந்து விடுதலை பெறுவதில் திராவிடர்கள் செலவிடும் ஒவ்வொரு நாளும், அவர்கள் மீள முடியாத அழிவுப் பள்ளத்தில் வீழ்ந்துகொண்டிருக்கும் பயங்கரத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற எச்சரிக்கையைத்தான், வடவரின் ஆட்சி கடந்த ஓராண்டுக் காலத்தில் உரத்த குரலில் திராவிடருக்குத் தந்துள்ளது.

இந்த எச்சரிக்கையைக் கவனத்தில் கொண்டு நடுக்கத்துடனும், அதேபோது நம்பிக்கையுடனும் திராவிடர்கள் புத்தாண்டைத் துவங்குகிறார்கள்.

புத்தாண்டு, திராவிடருக்கு நிரந்தரமான விடுதலையோடு கூடிய நல்வாழ்வைப் பெறுவதற்கு-வடவரின் பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திர திராவிடம் காணுவதற்கு நமக்கு நல்லபல வாய்ப்பும், உள்ள உறுதியும், உற்சாகமும் எழுச்சியும் தருமென்று மனதார நம்புகிறோம்.

வாழ்க — கடந்துபோன, 1955! வருக—1956!

'தொழில் நிர்வாகத்தில் தொழிலாளர் பங்கு பெற வேண்டும்'

'சமத்துவசமுதாய உருவாக்கத்திற்கு தனியார் துறை ஊறு செய்யக்கூடாது'

25 ஆண்டுகளுக்கு மாற்றம் இருக்காது!

மத்திய அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கருத்து

"ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஊறு செய்யாமல், ஒரு அளவுக்கு உட்பட்டு இயங்குமானால், தொழில் வளர்ச்சியில் தனியார் துறையில் இன்னும் 25 ஆண்டுகளுக்கு மாற்றம் ஏதும் நிகழ முடியும் என்று நான நினைக்கவில்லை; தனியார் துறைக்கு ஒரு உறுதிமொழியாக நான் இதைச் சொல்லவில்லை; அல்லது, நாங்கள் வரி விதிக்கமாட்டோம் என்றும் நான் கூறவில்லை. மேலும், பொதுவாக நாட்டில் செழிப்பேற்பட, வரி விதிப்பு அதிகரித்தாகவேண்டியது தவிர்க்க முடியாததாகும்,"

—என்று, மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் டி டி கிருஷ்ணமாச்சாரி கோவை வர்த்தகக் கழகத்தின் வெள்ளிவிழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"தொழிலாளர்களும், நிர்வாகிகளும் இரண்டு தனித் துறைகளில் பிரிந்து நின்றால், தவிர்க்க முடியாதபடி வர்க்க முரண்பாடு—போராட்டம் தோன்றியேதீரும்.

"தொழிலாளர்களும், தொழில் முதலாளிகளும் ஒன்றுசேர்வதற்கான வழியைக் காண வேண்டுவது, இன்றைய இளைஞர் சமுதாயத்திற்கும், தொழில் முதலாளிகளுக்கும் தரப்படும் அறைகூவலாகும்.

"அவர்கள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவும் எண்ணம் கொண்டால்தான் ஒன்றுசேர இயலும். அதாவது, தொழில் நிர்வாகத்திலும், தொழில் மூலதன ஈடுபாட்டிலும் தொழிலாளர்கள் பங்கு பெறுவது என்பது தான் அந்த பரஸ்பர எண்ணமாகும்."

அபிவிருத்தித் திட்டம் கைவிடப்படும்?

'மோசமான நிலைமை'யைச் சமாளிக்க முடியுமா?

ஐதராபாத், டிச. 30—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் இரயில்வே அபிவிருத்தித் திட்டங்கள் சிலவற்றைக் கைவிட்டுவிட நேரிடக் கூடுமாம்!

இது பற்றி தெரிவித்த இரயில்வே அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி, ரூ. 1,480 கோடிக்கு இரயில்வே இலாகா திட்டமிட்டதென்றும், ஆனால், திட்டக் குழு ரூ. 1,125 கோடிதான் தற்காலிகமாக ஒதுக்கியுள்ளதென்றும், இந்த 'வெட்டு' காரணமாக வருங்காலத்தில் இரயில்வே இலாகா 'மோசமான நிலைமை'யைச் சமாளிக்க வேண்டியிருக்குமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

'2-ம் திட்டத்தில் தனியார் துறை பெரியதோர் இடம் பெறும்'

வர்த்தக மாநாட்டில் லால்பகதூர் சாஸ்திரி

ஐதராபாத், டிச. 30—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தனியார் துறை பெரியதோர் இடம் பெறும்"

என்று, இந்தியப் பேரரசின் இரயில்வேத்துறை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி, இங்கு நடைபெறும் அகில இந்திய வர்த்தக மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"தனியார் துறையை சந்தேகமான ஒரு நிலையில் வைத்திருப்பது திட்டத்திற்கே உகந்தது அல்ல

"36 கோடி மக்களைக்கொண்ட ஒரு நாட்டில் எந்த ஒரு சமூகப் பிரிவும், எத்துணை பணக்காரர்களாயிருப்பினும், தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்ள முடியாது; ஏனெனில், எல்லோரும் சாதாரண மக்களின் விருப்பத்திற்குத் தலைவணங்கியே ஆகவேண்டும்.

"எனவே தனியார் துறை, சர்க்கார் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கும், அளவுகளுக்கும் உட்பட்டுத் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கலாம்.

"எந்த ஒரு தொழிலும் சரியாக இயங்கவில்லை என்று தோன்றினாலோ, அல்லது பொதுநன்மை கருதியோ, சர்க்கார் அந்தத் தொழிலைத் தாங்களே நிர்வகிக்க மேற்கொள்ளுவார்கள்; ஆனால், இதனை எல்லா நேரத்திலும் எப்போதும் சர்க்கார் செய்துகொண்டிருக்கும் என்பதல்ல.

"நமது தொழிற்சாலைகளிலும், உற்பத்தி நிலையங்களிலும் ஒரு குறிப்பிட்ட விலைக்கு நல்ல 'தர'மான பொருள்களையே உற்பத்தி செய்ய வேண்டும்.

"பொருள்களின் விநியோகம், விலை, தரம் இவற்றில் நம்பகமாக நடந்துகொள்ள வேண்டுவது அவசியமானதாகும்.

'ஒரு வெளிநாட்டு நிறுவனம் அதிக நம்பகமானது என்று கூறப்படுவதைக் கேட்பது, நமது கௌரவத்திற்குக் கேடு தருவதாகும்"

புத்தகங்கள் பிரசுரம் பற்றி புள்ளி விவரமாம்!

புதுடில்லி, டிச. 30—

முதல் தடவையாக இந்தியாவில் பிரசுரமாகும் புத்தகங்கள் பற்றி ஆதாரபூர்வமான புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கு, மத்திய சர்க்கார் தபால்-தந்தி இலாகா முயற்சி எடுத்து வருகிறதாம்.

வடநாட்டு அகதிகளுக்கு நஷ்டஈடு

நவம்பர் முடிய ரூ. 21·5 கோடி தரப்பட்டதாம்

துரிதமாக வேலை செய்ய 10 அலுவலகங்கள்

இந்தியப் பேரரசின் தாராளம்

புதுடில்லி, டிச. 30—

நவம்பர் திங்கள் இறுதிவரை மேற்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த 'அகதி'களுக்கு அகதி புனரமைப்பு இலாகாவின் கீழ் உள்ள பிராந்திய அதிகாரிகள் சுமார் ரூ. 21.5 கோடி வரை நஷ்டஈடு வழங்கியிருக்கின்றனராம். இதில் ரூ. 14.5 கோடி வரை ரொக்கமாக நஷ்டஈடு தரப்பட்டதாம். இதர தொகை எல்லாம் சொத்துக்களாகத் தரப்பட்டனவாம்.

இதில் மூன்றில் ஒரு பகுதி பணம், டில்லி மாநிலத்தில் குடியேறியுள்ள அகதிகளுக்குத் தரப்பட்டதாம்; என்றாலும், அதிகமாக நஷ்டஈடு பெற்றவர்கள், ஜலந்தர் வட்டத்தில் குடியேறியுள்ள அகதிகளேயாவர்.

நஷ்டஈட்டுத் தொகை தரும் வேலையைத் துரிதப்படுத்துவதற்காக அகதி புனரமைப்பு இலாகா டில்லி, பம்பாய், ஜலந்தர், அஜ்மீர், போபால், ஜெய்ப்பூர், லக்னோ, நாகபுரி, இந்தூர், கல்கத்தா ஆகிய இடங்களில் 10 அலுவலகங்கள் திறந்துள்ளதாம்.

நவம்பர் மாதத்தில் மட்டும் இந்த அலுவலகங்கள் ரூ. 95 இலட்சம் வரை நஷ்டஈடாகத் தந்துள்ளனவாம். இதில் மிகப் பெரும் தொகை ரொக்கமாகவே தரப்பட்டதாம்.

புயல் நிவாரண நிதி

உள்ளாட்சிக் கழகங்கள் உதவிக்கு 'வரம்பு'

புயல்—புனலால் பாதிக்கப்பட்டோரின் நிவாரண நிதிக்கு மாவட்டக் கழகங்கள், நகர சபைகள், பஞ்சாயத்துக் கழகங்கள், நன்கொடைகள் அளிப்பதை சென்னை சர்க்கார் அனுமதித்துள்ளனர்; ஆனால், வரவு-செலவில் பற்றாக்குறையும், சிப்பந்திகளுக்குப் பஞ்சப்படி தருவதற்குச் சர்க்காரிடம் மானியமும் பெறும் உள்ளாட்சிக் கழகங்கள், குறிப்பிட்ட 'வரம்பு'களுக்குமேல் நன்கொடைகள் அளிக்கக் கூடாதென்று குறிப்பிட்டுள்ளனர்.

★

புதுவை வட்ட தி. மு. கழகக் காணிக்கை

25—12—55ல் நடைபெற்ற புதுவை வட்டக் குழுவின் முடிவுப்படி ரூ. 101 பொதுச் செயலாளருக்குப் புயல் நிவாரண நிதிக்காக 29-12-55ல் அனுப்பப்பட்டது.

செய்திச் சுருள்

★

போடிநாயக்கனூரில் தி.மா.மு. கழகத் துவக்கம்

22—12—55ல் சித்தியானந்தம் நினைவுத் துவக்கப் பள்ளியில் தி. மா. மு. கழகம், தோழர் பெரியசாமி தலைமையிலும், தோழர் தமிழன்பன் முன்னிலையிலும் துவக்கப்பட்டது. அவ்வமயம் நடைபெற்ற தேர்தலில் கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- செயலாளர்: வெள்ளச்சாமி; துணைச் செயலாளர்: சண்முகராசு; பொருளாளர்: மதிமணி; செயற்குழு உறுப்பினர்கள்: திலிப்குமார், முத்தலிபு, சங்கரலிங்கம், சாகுல் அமீது, காமராசு சாகுல், மனோகரன், பழனிவேலன், இராசேந்திரன், செல்வராயகம்

கூட்டத்தில் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

• • •

பூவிருந்தவல்லியில் தி. மா.மு. கழக அமைப்பு

20—12—55ல், பூவிருந்தவல்லியில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளையின் அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் க. இளஞ்செழியன் செயலாளராகவும், சா. வெற்றி அரசு துணைச்செயலாளராகவும், ஈ. நெடுமாறன் பொருளாளராகவும், மணியம், வரதன் புண்ணியகோட்டி, சிவானந்தம், பலராமன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மறுமலர்ச்சி நூல் நிலைய ஆண்டுவிழா

25—12—55 மாலை, திருவனந்தபுரம் சாலை கொத்தவால் தெரு மறுமலர்ச்சி நிலையத்தின் நான்காவது ஆண்டு விழா தோழர் க. வன்னியப்பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

தோழியர் அருணமொழி பேசுகையில், நாட்டில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி பற்றி விளக்கினார். அவருக்குத் திருவனந்தபுரம் தி. மு. கழகச் சார்பில் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

ஏ. டி. பன்னீர்செல்வம் நினைவுக் கழகம்

25—12—55 மாலை 5 மணிக்கு தூத்துக்குடி — கீழச்சண்முகபுரம் சர் ஏ. டி. பன்னீர்செல்வம் நினைவுக் கழக நிர்வாகக் குழுக் கூட்டம் தோழர் வெ. ஞானமணி தலைமையில் நடைபெற்றபோது, புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், தூத்துக்குடி சதி வழக்கில் தண்டிக்கப்பட்டுள்ள தோழர்களை விடுதலை செய்யுமாறு சர்க்காரை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதிகபட்ச வருமானம்

ரூ. 30,000 என நிர்ணயம்

புதுடில்லி, டிச. 30—

சர்க்கார் துறையில் பணியாற்றுபவர்களின் வருமானம் (சம்பளம், மற்றும் இதர வழிகள் மூலம் கிடைப்பது) அதிகபட்சமாக ஆண்டொன்றுக்கு ரூ. 20,000 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது, இப்போது ரூ. 30,000 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இந்த முடிவை, திட்டக் குழுவின் பொருளாதார ஆலோசகர் குழுவின் ஐந்தாண்டுத் திட்டம் குறித்து விவாதித்த பின்னர் மேற்கொண்டிருக்கின்றனர்.

முன்பு சிபாரிசு செய்யப்பட்ட அளவு ரூ 20,000-தான். இப்போது, புனராலோசனைக்குப் பிறகு ரூ 30,000 என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஏற்பாடு, பின்னர், சர்க்கார் துறையன்றி இதரத் துறைகளுக்கும் விரிவாக்கப்படுமாம்.

இது, நாட்டில் உள்ள பொருளாதார ஏற்றத் தாழ்வைச் சமனசெய்வதற்கென மேற்கொள்ளப்படும் திட்டமான முயற்சியில் ஒரு பகுதி என்றும், இதன் மூலம் திட்டங்களுக்குத் 'தியாகம்' புரியும் மனப்பாங்கு மக்களிடத்தில் வளரும் என்றும் கூறப்படுகிறது.

'அணு உலை'கள் மூலம் அதிசய முன்னேற்றம்

அணுசக்தியை மக்கள் நலனுக்குப் பயன்படுத்துவதற்கான முயற்சியில் 1955-ம் ஆண்டில் வெகுவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாம்.

அணு உலைகள் மூலம் மின்சார உற்பத்தி, மருந்து, தொழில், விவசாயம் ஆகிய துறைகளில் கதிரியக்கமுள்ள ஐசடோப்புகளைப் பயன்படுத்தல் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் வியப்புக்குரியதாகுமாம்.

'அணு உலை' என்பதை, நிலக்கரி மூலம் வெப்பம் ஏற்படுவதற்குப் பதிலாக தொடர்ச்சியாக அணு உடைபடுவதால் வெப்பம் ஏற்படும் அடுப்பு எனக் கூறலாம். அணுக்கள் பிளக்கப்படுவதால் ஏற்படும் வெப்பத்தைக்கொண்டு நீரை ஆவியாக்கி, அந்நீராவியால் 'டர்பைன்' இயந்திரத்தை இயக்கி, மின்சாரத்தை உற்பத்தி செய்கிறார்கள்.

உலைக்கு எரிபொருளாவது யுரேனியமாகவோ, தோரியமாகவோ இருக்கலாம். உலையை இயக்கச் செய்வதற்குக் குளிர வைக்கும் பொருளாக உபயோகிக்கப்படும் திரவம் அல்லது வாயு மிக முக்கியமானதாகும்.

மக்கள் தொகை அதிகரிக்கிறதாம்

இன்று 16 கோடியாக இருக்கும் அமெரிக்க மக்கள் தொகை இன்னும் 20 ஆண்டுகளுக்குள் 20 கோடியாக ஆகிவிடக் கூடுமாம்!

கடந்த 5 ஆண்டுகளில் அமெரிக்க மக்கள் தொகை 1,50,00,000 அதிகமாகியுள்ளதாம். அண்மையில் ஏற்பட்டிருக்கும் இந்தப் பெருக்கம் பெரும்பாலும் நாட்டின் மேற்கிலும் தெற்கிலும் உள்ள சிறிய தொழில் பிரதேசங்களில் ஏற்பட்டதேயாகுமாம்.

• • •

'ஆர்வ' நிலை அங்கே— 'ஆதிக்க' நிலை இங்கே!

1955 அக்டோபரில் அமெரிக்கப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் 3,72,35,000 மாணவர்கள் இருந்ததாகவும், இந்தத் தொகை 1954 அக்டோபரில் இருந்ததைவிட 13,00,000 அதிகமாகும் என்றும், கடந்த ஏழு ஆண்டுகளில் மாணவர் தொகை 70 இலட்சத்துக்கு மேல் கூடியிருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிப்பு

தென்ஆற்காடு மாவட்டம் அரகண்டநல்லூரில் திராவிட முன்னேற்றக் கழகக் கிளை சரிவர உருவாக்கப்படவில்லை. ஆனால், அப்படி ஒரு கிளை உருவாக்கப்பட்டதைப்போல் எண்ணிக்கொண்டு அரகண்டநல்லூர் திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் பெயரால் தோழர் ஏ. பி. பரசுராமன் என்பவர் ஆங்காங்கு நாடகம் நடத்திவருவதாகத் தெரிகிறது. இது, முறையற்றச் செயலாகும்; இதற்கு ஆதரவு தராமல் இருக்கும்படியாக ஆங்காங்குள்ள தி. மு. கழகத் தோழர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்' சென்னை-13 31-12-'55 } தி. மு. கழகத் தலைமைநிலையம்

சுகர்ணோவின் முதல் மனைவியார்

மணவிலக்கு கோரியிருப்பதாகத் தகவல்

இந்தோனேஷியக் குடியரசுத் தலைவரான சுகர்ணோவின் முதல் மனைவியான திருமதி பத்மாவதி, இப்போது 'விவாக விடுதலை' கோரியிருப்பதாக, 'இந்தோனேஷிய ராயா' என்ற இதழ் தகவல் தந்திருக்கிறதாம்.

ஐந்து குழந்தைகளுக்குத் தாயான பத்மாவதி, தனது மணவிலக்கு பற்றி வெளிவந்துள்ள இந்தச் செய்தி குறித்துக் கருத்தறிவிக்க மறுத்துவிட்டாராம்.

கடந்த ஆண்டில் தலைவர் சுகர்ணோ ஹார்தினி என்ற இளம் விதவை ஒருவரை இரண்டாந்தாரமாக மணந்துகொண்டார். அவருக்கு இப்போது ஒரு குழந்தையும் பிறந்திருக்கிறது.

'பத்மாவதியே முதல் பெண்மணி என்ற அந்தஸ்தைப் பெறுவார்' என்று சுகர்ணோ உறுதிமொழி தந்தபோதிலும், இந்தோனேஷியப் பெண்கள் சங்கங்கள், சுகர்ணோ இரண்டாம் மணம் செய்துகொண்டதைக் கண்டித்தனா—எதிர்த்தனர்!

50 மைல் பரப்பளவில் தங்கப் படிவங்கள்

கல்கத்தா, டிச. 30—

கோலார் தங்கவயலைச் சுற்றி 50 மைல் பரப்பளவில், பாறைகளிலிருந்து வெட்டியெடுக்கக் கூடிய தங்கப் பாளங்கள் கிடைக்[illegible] கூடுமென்று கருதப்படுகிறது[illegible]

அடுத்த ஐந்தாண்டுகளி[illegible] இது பற்றி பூதத்துவ நிபுண[illegible]கள் ஆ[illegible]ய்ச்சி செய்யக்கூடும்.

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. தோழர்கட்கு

"தி. மு. கழக உறுப்பினர் தகுதியைப் புதுப்பித்துக் கொள்ளவும், கிளைக் கழகங்கள் இல்லாத ஊரில் கிளைக் கழகங்கள் அமைக்கவும், கிளைக் கழகச் செயலாளர்களும், பொறுப்பாளர்களும் உறுப்பினர் பதிவுத் தாள்கள் பெற்றுச் சென்றுள்ளனர். காலதாமதம் செய்யாமல் மேற்படி நிகழ்ச்சியை வெற்றிகரமாய் முடித்து, உடனடியாக மாவட்டக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகிறேன்.

வருகிற தைத் திங்கள் 1-ம் நாள், நமது நகரத்தில் திராவிடர் திருநாளைச் சிறப்புடன் நடத்தவேண்டி, நகர தி. மு. கழகம், வடசேரி தி. மு. கழகம், கிருட்டிணன் கோவில் தி. மு. கழகம் ஆகியவைகள் பொங்கல் விழாக் குழு ஒன்று நிறுவி, அதற்கான ஆக்க வேலைகளில் ஊக்கத்தோடு உழைத்து வருகின்றனர். விழாவில் சொற்பொழிவுப் போட்டிகள், ஒலி நாடகங்கள், இசையரங்குகள், மற்றும் பல கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். எனவே, நிகழ்ச்சிகள் வெற்றிபெற, கழகத் தோழர்களும், பொது மக்களும், தங்களாலியன்ற பொருளுதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, நாஞ்சில் மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர் வி. எம் ஜான் அறிவிக்கிறார்.

குறிப்பு:—சொற்பொழிவுப் போட்டியில் கலந்துகொள்ள விழையும் தோழர்கள், 13—1—56 மாலை 5 மணிக்குள் வடசேரி தி மு கழகத்தில் வந்து தங்கள் பெயரைப் பதிவு செய்யவும். 12 வயதிற்கு மேல் 18 வயதிற்குட்பட்ட தோழர்கள் மட்டுமே போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்

மதுவிலக்கு நடைபெறும் இலட்சணம்!

சேலம், டிச. 28—

நவ. 30-ந் தேதியுடன் முடிவடைந்த மூன்று மாத காலத்தில், சேலம் மாவட்டத்தில் மட்டும் 4,483 மதுவிலக்குக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன—இக் குற்றங்களில், 4,339 பேர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று செய்தியொன்று கூறுகிறது.

மதுவிலக்குக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் போலீசார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக 53,294 காலன் அளவு கள்ளச் சாராய ஊறலும், 77 காலன் சாராயமும் கைப்பற்றப்பட்டுள்ளனவாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகச் செய்தி

கிளைக் கழகச் செயலாளர்களுக்கு!

★

உறுப்பினர் சேர்க்கும் பணியை நிறைவேற்றிவருகிறீர்களா?

★

1956 ஜனவரி 31-ம் நாள் வரைதான் உறுப்பினர் சேர்க்கும் காலமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவூட்டுகிறோம்

எனவே உறுப்பினர் சேர்க்கும் தாள்களைப் பெற்றிருப்போர் உடனே அதனை நிறைவு செய்து தலைமை நிலையத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் உறுப்பினர் சேர்க்கும் தாள்கள் வேண்டுவோர் மாவட்டக் குழுவின்மூலம் பெற்றுக்கொள்ளவும்.

—தி. மு. க. தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

எல்லாம் திட்ட மயம்!

புதுடில்லி, டிச. 30—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், உல்லாசயாத்திரைக்குரிய இடங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ், மாமல்லபுரத்தில் ஒரு சிற்றுண்டிச்சாலை அமைக்கப்படுமாம்.

வேடந்தாங்கலில் உள்ள பறவைகள் பாதுகாப்பு இடமும் அபிவிருத்தி செய்யப்படுமாம்.

கழகச் செய்திகள்

★

மே[illegible]பாளையம் தி. மு. க.

23—12—55-ல் தோழர் தெ. க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் வரவு-செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், புயல், புனலால் பாதிக்கப்பட்டோருக்கு அனுதாபம் தெரிவித்தும், நிவாரண நிதியாக ரூ 5 அளிப்பதென்றும், கழகத்திற்குப் பெருவாரியாக உறுப்பினர்கள் சேர்ப்பதென்றும், மாநில மாநாட்டு நிதிக்கு ரூ 25 கொடுப்பதென்றும், பொங்கல் விழாவை 14—1—56-ல் கொண்டாடுவதென்றும், விழாக் குழு ஒன்று தேர்ந்தெடுத்தும், புயல் நிவாரண நிதி வசூலிப்பதென்றும் முடிவுகள் செய்யப்பட்டன.

மேலூர் தி. மு. கழகம்

25—12—55 மாலை 6-30 மணிக்கு சந்தியம்பாக்கம் கிராமத்தில், கழகச் சார்பில் பிரச்சாரக் கூட்டம் ஒன்று தோழர் சி. பி. மதியழகன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆ. கிருட்டிணன், இராதாமணாளன், இரா. சண்முகம், புனிதம்-மு. குணசேகரன், தங்கசாமி, [illegible] ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

ஆமதாபாத் நகர தி. மு. க.

25-12-55 மாலை 5 மணிக்கு, மணிநகர் தி. மு கழக அலுவலகத்தில், தோழர் இரா. தனிகாசலம் தலைமையில், நகரக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கு அனுதாபமும், தென்னகத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி திரட்டி அனுப்புவதெனவும், 14—1—56-ல் பொங்கல் விழாவையும், கழகத்தின் 5-ம் ஆண்டு விழாவையும் சிறப்புற நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

பின்னர் தோழர் ஏ. என் இராமசாமி கழகத்தின் செயல் முறைகளைப் பற்றி விளக்கிப் பேசினார்.

திருமணங்கள்

11—12—55 காலை 8½ மணியளவில் ஆமதாபாத் — சமால்பூர் (வெளிபுறம்) பெரும்பூர் நம்மன் லால் மகன்லால் சாலில் தோழர் எஸ். சண்முகம் இல்லத்தில், தோழர் ர. ச. வேலாயுதன்—தோழியர் க. சிவகாமி திருமணம் தோழர் ஆர். பி. சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்களுக்கு தோழர்கள் பலர் அன்பளிப்பும், முத்தமிழ் நாடக மன்றத்தின் சார்பில் வாழ்த்து மடலும் அளித்தனர். மணிநகர் தி. மு. கழகச் சார்பில் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன. இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது —வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

• • •

மதுரை மாவட்டம் கரிசல்பட்டி தோழர் பொன்னையா—தோழியர் நாகம்மையார் வாழ்க்கை ஒப்பந்தம் திருமங்கலம் தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம் ஏ. இராசக் முன்னிலையில் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்— நன்றி—பொறுப்பாளர்.

‘பாங்கி ஊழியர் வேலைநிறுத்தம் சட்டவிரோதமானது’

—பண்டித பந்த்

‘அது தவருனதோர் நடவடிக்கை’

—பண்டித நேரு

‘சர்க்கார் மீண்டும் தவருன வழி செல்கிறது’

—பாங்கி ஊழியர் தலைவர்

லக்னோ, ஜன. 1—

“பாங்கி ஊழியர் மேற்கொள்ளப் போவதாக அறிவித்திருக்கிற வேலை நிறுத்தம், சட்ட விரோத மானது,”

என்று, உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிருர்.

பத்திரிகையாளரிடம் பேசிய அவர் கூறியதாவது:—

“பாங்கி ஊழியர் தகராறு நீண்ட காலமாக இருந்து வருகிறது. இது குறித்து ஒரு குழு, விசாரணையும் செய்துவிட்டது; அதன் தீர்ப்பை மக்கள் சபையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதன் பின்னர் தகராறு எதும் இருக்குமென சர்க்கார் நினைக்கவில்லை.

“ஊழியர்களைத் திருப்தி செய்ய சர்க்கார் பெருமுயற்சி எடுத்துக் கொண்ட பின்னும், இந்தப் பிரச்சினையை மீண்டும் கிளப்பியிருப்பது துரதிருஷ்டவசமானதாகும் இப்போது யாருக்கும் பயன்படாத வேலை நிறுத்த முடிவை ஊழியர்கள் மேற்கொண்டிருக்கின்றனர்.

மக்கள் சபை ஏற்றுக்கொண்டிருக்கிற முடிவுகளும், தீர்ப்புகளும் இந்த முறையில் கௌரவிக்கப்படு மாளுல், எப்படித் தகராறுகளைச் சமூகமாகத் தீர்ப்பது, ஊழியர்களுக்கும் — முதலாளிகளுக்கு மிடையே நல்லுறவு நிலவச் செய்வது என்பது எனக்குத் தெரியவில்லை.”

பண்டிதரின் உபதேசம்!

புதுடில்லி டிச. 31—

‘பாங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்திருக்கின்றனர். அது தவருனதோர் நடவடிக்கையாகும்.

“பாங்கி ஊழியர் தகராறுபோல வேறு எந்த ஒரு தொழில் தகராறையும், சர்க்கார், எல்லா அம்சங்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு, கரிசனமான கவலையுடன்—அக்கரையுடன் தீர்த்து வைக்க முற்பட்டதில்லை இப்படி பாங்கி ஊழியர்களிடத்தில் மிகுந்த அனுதாபத்துடன் சர்க்கார் நடந்துகொண்டிருக்கும் போது ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட நினைப்பது தவறு; எனவே, ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக் கூடாதெனக் கேட்டுக்கொள்கிறேன்,”

என்று, பிரதமர் நேரு தாம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

அரசாங்கம் மறுக்கிறது!

‘தகராறுகளுக்குப் பரிகாரமாகத் தரப்பட்ட தீர்ப்புகளையும், ஏற்படுத்தப்பட்ட சட்டங்களையும் பல பாங்கி முதலாளிகள் மீறியதாகக் காணப்பட்ட பின்னும், சர்க்கார் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க சிறு விரலைக்கூட அசைத்தது கிடையாது’—என்று, பாங்கி ஊழியர் சம்மேளனப் பொதுச்செயலாளர் பிரபாத்கார் வெளியிட்ட பிட்ட அறிக்கையை மறுத்து இந்திய சர்க்கார் குறிப்பொன்று வெளியிட்டிருக்கின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்றும், பாங்கி நிர்வாகிகள் சட்டங்களை மீறியதாக தங்களுக்குத் தகவல் ஏதும் இல்லை என்றும், தகவல் தரப்படுமாளுல் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கும் என்றும் அந்தக் குறிப்புக் கூறுகிறதாம்.

நேரில் சந்திக்க......

டில்லி மாநில பாங்கி ஊழியர் சங்கத் தலைவரான பர்வாளு என்பார், பண்டித நேருவுக்கு எழுதியுள்ள கடிதத்தில், மீண்டும் சர்க்கார், பாங்கி முதலாளிகளின் பேச்சைக் கேட்டுக்கொண்டு தவருன வழியில் செல்கின்றனர் என்றும், பாங்கி ஊழியரின் குறைகளை நேரில் எடுத்துச் சொல்ல அவகாசம் தருமாறும் கேட்டிருக்கிருர் என்று தெரியவருகிறது.

‘சர்க்காருக்கு அதிகாரம் இல்லை!’

ஜன. 6, 7-ந் தேதிகளில் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் வேலை நிறுத்தம் சட்ட விரோதமாக இருக்க இயலாதென்றும், ‘அது சட்ட விரோதமானது’ என்று அறிவிக்க சர்க்காருக்கு அதிகாரமில்லையென்றும் அ. இ. பாங்கி சிப்பந்திகள் சங்கப் பொதுச்செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

‘தகராறுகளைத் தீர்ப்பதற்குப் பதிலாகச் சிப்பந்திகளைப் பயமுறுத்த முயற்சித்தால் நாங்கள் பணியமாட்டோம்; எவர் பயமுறுத்தினாலும் சம்பள வெட்டுக்கு இணங்கமாட்டோம்’ என்றும் அவர் சொன்னுர்.

பாங்கி சிப்பந்திகளின் நலனுக்கே பாதகமாம்!

“பாங்கி சிப்பந்திகள் நிலையைப் பற்றி சமீபத்தில்தான் சட்டமியற்றப்பட்டது; அந்தச் சட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள் சம்பந்தமாகப் பாங்கிச் சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோதமாகும்—மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அவர்களுடைய நலன்களுக்கே பாதகமானதாகும்,”

என்று, இந்திய சர்க்கார் தொழிலாளர் இலாகா செயலாளர், இந்தியப் பாங்கி சங்கத்தின் தலைவருக்கு அனுப்பியுள்ள தந்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

நெல்லை மாவட்ட தி. மு. க. நிர்வாகிகட்கு

“8—1—56 காலை 9 மணிக்கு, நெல்லைச் சந்திப்பு, நெடுஞ்சாலை தபால் அலுவலகத்திற்கு எதிர்ப்புறமுள்ள மாடியில், நெல்லை மாவட்ட தி. மு. கழக நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பொதுக்குழுவுக்கு ஒரு உறுப்பினர் தேர்வும், மற்றும் சில முக்கியமான பொருள்கள் குறித்தும் ஆலோசிக்கப்படும்,”

என்று, நெல்லை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி அறிவிக்கிருர்

சென்னை 50-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு

4—1—56 இரவு 9 மணிக்கு. சென்னை 50-வது வட்ட தி. மு கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம், கழகப் பணிமனையில் (எண் 7, வேலாயுத ராசா தெரு, சென்னை-28) நடைபெறும். அதுபோது, திராவிடர் திருநாள் நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படும்

• • •

தினசரி இரவு 7 மணியிலிருந்து 9 மணி வரை, மேற்படி கழகக் கட்டிடத்தில் உறுப்பினர் சேர்க்கப்படும். அனுதாபிகள் அனைவரும் தங்கள் பெயரை உடனடியாக பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

புதிய தொழிற்சங்க அமைப்புக் கூட்டம்

4—1—56 மாலை 5 மணிக்கு; திருச்சி மாவட்டம் மூங்கில்பாடியில் சுரங்கத் தொழிலாளர்களின் (ஜிப்சம்) புதியதொழிற்சங்க அமைப்புக்கூட்டம், மாரியம்மன் கோவில் மைதானத்தில், தோழர் எம். வடிவேல் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எம். எஸ். மணி, எஸ் ஜி. கிருஷ்ணன், ஐ எம் ஷரீப், ஜி. சிவபெருமாள், ஜி. செல்லபிள்ளை, ஏ நாராயணசாமி, க. சுப்பையா, கிருஷ்ணசாமி, சுப்பையா ஆகியோர் பேசுவர்.

இல்லை!

★

8—1—56 அன்று, புயல் நிவாரண நிதிக்காக, சென்னையில், தியாகராயர் கல்லூரி மண்டபத்திலோ, அல்லது வேறு இடத்திலோ, கட்டணமுள்ள கூட்டத்தில் அண்ணு அவர்கள் கலந்துகொள்ளுகின்றுர் என்று கூறப்படுவதாகத் தெரியவருகிறது. அவ்விதம் அண்ணு அவர்கள் எந்த நிதிக் கூட்டத்திலும் கலந்துகொள்ளவில்லை என்று அறிவித்திருக்கிருர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

‘அறிவகம்’ சென்னை-13 2-1-’56 } தி. மு. கழகத் தலைமைநிலையம்

புயல் நிவாரண நிதி சிறப்புக் கூட்டம்

7—1—56 காலை 9 மணிக்கு, ஆரணி (வட ஆற்காடு) நேஷனல் தியேட்டரில், போளூர் கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணுதுரை, ப. உ. சண்முகம் ஆகியோர் பேசுவர்.

மலேயா தமிழர்களின் தாராள உதவி

சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் ‘தமிழ் முரசு’ இதழ் மக்களிடத்தில் நிதி திரட்டி மேலும் ரூ. 50 000 அனுப்பியுள்ளது; ஏற்கனவே ரூ. 30,000 அனுப்பியுள்ளது.

கோலாலம்பூரிலிருந்து வெளிவரும் ‘தமிழ் நேசன்’ இதழ் மொத்தம் ரூ. 1 இலட்சம் அனுப்பியுள்ளது.

புதிய மாநிலங்கள் அமைப்பதில் காலதாமதமாகும்

மண்டல மன்றங்கள் அமைந்தே தீருமாம்!

மத்திய உள்நாட்டு அமைச்சர் பந்த் விளக்கம்

லக்னோ, ஜன. 1—

ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டபடி, புதிய மாநிலங்கள் வரும் அக்டோபர் திங்களில் அமையாது என்றும், சொத்துக்கள் பரிவர்த்தனை போன்ற மாநிலப் பிரிவினையை ஒட்டி எழும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்குச் சிறிது காலதாமதம் ஆகும் என்றும் பண்டித பந்த் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிருராம்.

மாநில புனரமைப்பை ஒட்டி, அரசியல் சட்டம் மீண்டும் திருத்தப்பட வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்திருக்கிருராம்.

மாநிலப் புது அமைப்பு பற்றிய மசோதா தயாரிக்கப்படும்போது, மண்டல ஆலோசனை மன்றங்கள் அமைப்பது பற்றியும் குறிப்பு இருக்கும் என்றும் அதற்கான இறுதி விபரங்களை, இன்னும் தயாரிக்கவில்லை என்றும் பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிருர்.

இந்த மண்டல மன்றங்கள் ஆலோசனை வழங்கும் தன்மையனவாயிருக்கும் என்றும், திட்டமிடுதல், பொருளாதாரம், அபிவிருத்தி போன்ற விஷயங்களைக் கவனிப்பதை வேலையாகக் கொள்ளும் என்றும் பந்த் விளக்கம் தந்தாராம்

தொழிலாளர் போராட்டம் வெற்றி

மூடப்பட்ட ஆலை திறக்கப்படும்

கோரிக்கைகள் ஏற்கப்படுகின்றன

சென்னை, ஜன. 1—

‘மைசூர் பிரீமியர் மெடல் பாக்டரி,’ மற்றும் ‘இந்துஸ்தான் ரோலிங் மில்’ தொழிலாளர்கள் கடந்த நான்கு நாட்களாகக் குஜராத்தி முதலாளியின் சட்ட விரோதமான கதவடைப்பை எதிர்த்து மேற்கொண்ட உண்ணுவிரத மறியல் போராட்டம் வெற்றிகரமாக முடிவுற்றிருக்கிறது.

31-12-55 அன்று தொழிற் கமிஷன் முன்பு, தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் — முதலாளிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே ஏற்பட்ட சமரச முடிவை ஒட்டி போராட்டங்கள் நிறுத்தப்பட்டன.

கடந்த 19—9—55 அன்று, சட்ட விரோதமாக மூடப்பட்ட ‘ரோலிங் மில்’ மீண்டும் வரும் 5-ந் தேதியன்று திறக்கப்படும்; அத்தனை தொழிலாளர்களும் அன்று வேலைக்குச் செல்வார்கள்; பழைய ‘சர்வீஸ்’ எந்த முறையிலும் பாதிக்கப்படமாட்டாது; தொழிலாளர்கள் குறிப்பிட்ட உற்பத்தியைக் கொடுக்க உத்திரவாதம் தந்துள்ளனர்; தொழிலாளர்களின் போனஸ், கூலி உயர்வு, முதலிய சிக்கல்கள் 15—2—56-க்குள் இறுதியாக முடிவு செய்யப்படும்; உண்ணுவிரதம், மறியல் முதலியவற்றில் ஈடுபட்ட தொழிலாளர்களில் எவரையும் முதலாளி பழிவாங்கக்கூடாது—என்று, தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப ஒப்பந்தம் ஏற்பட்டதால், தொழிலாளர்கள் ‘உண்ணுவிரதம்,’ மறியல் ஆகியவற்றைக் கைவிட்டு விடுவதுடன், தொழிற்சாலைக்குள்ளேயே தங்கிவிட்ட 300 தொழிலாளர்களும் 31-ந் தேதியன்று வெளிவந்தனர். 2-ந் தேதியன்று வழக்கம்போல வேலையைத் துவங்குவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டு விட்டது.

தொழிலாளர் சார்பாக தோழர்கள் கே. டி. கே. தங்கமணி, எஸ் கிருஷ்ணமூர்த்தி, கே. எஸ். ஜானகிராம் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

அவர்கள் தொழிலாளர்களின் போராட்டத்தின்போது உடனிருந்து நிலைமைகளைக் கவனித்ததை ஒட்டி, தொழிலாளர்களைச் சந்தித்து போராட்ட வெற்றி குறித்து எடுத்துரைத்தனர்.

தொழிற்சாலைக்கு வெளியே ‘உண்ணுவிரதம்’ இருந்த தோழர் விநாயகமும் தனது ‘பட்டினிப் போரை’ முடித்துக்கொண்டார். தொழிற்சாலைக்குள் பட்டினியுடன் வேலை செய்துவிட்டு அங்கேயே தங்கிவிட்ட தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டதாக 31-ந் தேதி பகல் 12 மணியளவில் நிர்வாகிகள் அறிவித்தனர் மேலும் தொழிற்சாலையைவிட்டு வெளியேருவிட்டால், போலீசார் உதவியுடன் தொழிலாளர்களை வெளியே விரட்டப் போவதாகவும் அவர்கள் மிரட்டினர். ஆளுல் பகல் 2 மணிக்கு சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது.

30-ந் தேதியன்று மறியல் செய்த 14 தொழிலாளர்களுக்கு போலீஸ் நீதிமன்றம், 7 நாட்கள் சிறைத் தண்டனை தந்து தீர்ப்பளித்தது.

• • •

இந்தத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கை ஈடேற்றத்திற்காக நடைபெற்ற போராட்டத்தை ஆதரித்தும், சர்க்கார், மற்றும் முதலாளிகளின் போக்கைக் கண்டித்தும் தலையங்கம் எழுதியும், போராட்டச் செய்திகளை விரிவாக வெளியிட்டும் தங்களுக்கு ஆதரவு தந்து, வெற்றி பெற உதவியமைக்காகத் தொழிலாளர்கள் சார்பில், ‘நம் நாடு’ இதழுக்கு நன்றிகலந்த வணக்கம் தெரிவிப்பதாகத் தொழிற்சங்கத்தவர் கடிதம் எழுதியிருக்கின்றனர்.

சிறப்புக் கூட்டத்தில் அண்ணு விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

:வேண்டுமே தவிர, நேரு பண்டிதர் கவலைப்படுவார் என்று எதிர்பார்க்க முடியாது.

“நம் மக்கள் அவதியைத் துடைக்க நமக்குத்தான் உரிமை—நம்மாலேதான் அது ஆகும் என்ற ஆணவம்—நமக்குமட்டுமே அது முடியும் என்ற கர்வம் இவற்றுடன் கூட நீங்கள்—சழகத் தோழர் தோழர்கள், புயல், வெள்ள நிவாரண வேலைகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கோள்கிறேன்.”

பாக்-ஆப்கன் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காபூலில் உள்ள பாக் தூதவர் ஆப்கன் வெளி விவகார அமைச்சரைச் சந்தித்தபோது, இரு நாடுகளிடையேயும் வளர்ந்துள்ள நெருக்கடி நிலை குறித்து வருத்தம் தெரிவித்ததாயும், சமரசம் காணுவதற்கு இரு நாட்டு அரசுத் தலைவர்களும் சந்தித்தால் வழி ஏற்படக்கூடும் என்றும் தெரிவித்ததாயும் அதை ஒட்டியே மன்னர் இந்த அறிவிப்பைத் தந்திருப்பதாயும் அந்த வானொலி அறிவிப்புக் கூறுகிறதாம்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.